#TNrejectsNEP **தேசியக் கல்விக் கொள்கை 2020 ஐ தமிழக அரசு ஒட்டு மொத்தமாக நிராகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து** #TNrejectsNEP

# தமிழகம் முழுவதிலும் பொதுமக்கள் பங்கெடுக்கும் மாபெரும் தொடர் போராட்டங்கள்

அன்புடையீர்

கொரோனா பெருந்தொற்று - பொது முடக்கத்தால் நாடே முடங்கிய சூழலில் பா.ஜ.க தலைமையிலான நடுவண் அரசு தேசியக் கல்விக் கொள்கை 2020-ஐ நடைமுறைக்கு கொண்டு வந்திருப்பது மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக நடுவண் அரசின் மக்கள் விரோத கல்விக் கொள்கைக்கு எதிராக தமிழகம் முழுவதிலும் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், கண்டனக் கூட்டங்கள், மாநாடுகள் நடத்தப்பட்டன. கடுமையான எதிர்ப்புகளையும் மீறி நடுவண் அரசு இதனை அறிவித்திருப்பது வியப்பாகவும் வேதனையாகவும் உள்ளது.

**ஏன் இவ்வளவு அவசரம்?**

பெருந்தொற்று பரவியிருக்கும் சூழலில் நாடாளுமன்றம் கூட்டப்படாமல், முறையாக விவாதிக்கப்படாமல், மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்காமல், தேசியக் கல்விக் கொள்கையை நடுவண் அரசு அறிவித்துள்ளது சனநாயகத்திற்கு விரோதமான செயல்; நம் இந்திய அரசியல் சாசனத்திற்கு முரணானது; கூட்டாட்சித் தத்துவத்தைக் குழி தோண்டிப் புதைக்கின்ற - இந்தியாவின் பன்முகத்தன்மையைச் சிதைக்கின்ற நடவடிக்கை. பல மொழிகள், பல இனங்கள், பல பண்பாட்டுக் கூறுகள், பல சமயச் சிறுபான்மையினர், மாறுபட்ட புவியியல் அமைப்புகளைக் கொண்ட இந்திய துணைக் கண்டத்திற்கு ஒரே மாதிரியான கல்விக் கொள்கை சாத்தியப்படுமா? அவ்வாறு ஒரே மாதிரியான கொள்கையை அனைத்து மாநிலங்கள் மீது திணிப்பது மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதாகாதா?

**சனநாயக நெறிமுறைகளுக்கு முரணானது**

இந்தக் கல்விக் கொள்கையின் நோக்கம் அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவதாக சொல்லப்பட்டாலும், இக்கொள்கையின் உள்ளடக்கமும் முன்வைக்கப்படும் முன் மொழிவுகளும் ஆபத்தானவை; ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சி நிரலைப் பிரதிபலிப்பவை. குலக்கல்வியை மீண்டும் கொண்டு வருவதற்கு வழிவகுப்பவை - சனநாயக நெறிமுறைகளையும், அரசமைப்பு விழுமியங்களையும் அடியோடு தகர்த்தெறிபவை - சமூக நீதியைக் குழிதோண்டிப் புதைப்பவை - குழந்தை உரிமைகளுக்கும் நலன்களுக்கும் எதிரானவை - கல்வியை வணிகமயமாக்கி, கார்ப்பரேட்டுகளுக்கு கடைவிரிக்க உதவுபவை - இந்தி / சமஸ்கிருத ஆதிக்கத்தை முன் நிறுத்துபவை - தமிழ் மொழிக்கும் தமிழர் பண்பாட்டிற்கும் எதிரானவை.

**சமூக நீதிக்கு எதிரானது**

இந்தக் கல்விக் கொள்கை தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி பேச மறுக்கிறது. கிராமப்புறங்களில் இயங்கும் அரசுப்பள்ளிகளின் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கு பதிலாக, போதிய எண்ணிக்கை இல்லை என்று கூறி அவற்றை மூடுவதற்கு வழிவகுக்கிறது. இதனால் ஏழை எளிய குழந்தைகளின் கல்வி உரிமையை பறிக்கப்படுகிறது; இடைநிற்றல் அதிகரிக்கும் அபாயம் உளளது.

**கல்லூரி படிப்புகளுக்கும் அகில இந்திய நுழைவுத் தேர்வு**

நீட் போன்ற அகில இந்தியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுகளை மருத்துவத்திற்கு மட்டுமல்லாமல் கலை அறிவியல் படிப்புகளுக்கும் (B.A., B.Sc., B.Com போன்றவற்றிற்கும்) கட்டாயமாக்குவதால், ஏழை எளிய மாணவர்கள் கல்லூரிகளில் நுழையும் வாய்ப்புகள் இனி அடியோடு மறுக்கப்படும். அகில இந்திய நிறுவனமான தேசிய தேர்வு முகமையே இனி அனைத்துத் தேர்வுகளையும் நடத்தும். இதனால் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான தன்னாட்சி உரிமை மறுக்கப்படுவதோடு மாநிலங்களுக்கு எந்த அதிகாரமும் இருக்காது. புதுதில்லியிலிருந்து இயங்கும் அனைத்திந்திய உயர் கல்வி ஆணையமே அனைத்தையும் கட்டுப்படுத்தும்.

**சமஸ்கிருத இந்தி ஆதிக்கம் – தாய் மொழிக் கல்வி மறுப்பு**

இந்தி மொழிக்கும், செத்துப்போன சமஸ்கிருத மொழிக்கும் தேவையற்ற முக்கியத்துவம் மிக அதிகமான நிதி ஒதுக்கீடும் வழங்கப்படுவதோடு, இவற்றை அனைத்து மாணவர்களிடமும் திணிப்பதற்கான முயற்சியை இக்கல்விக் கொள்கை பல இடங்களில் முன்வைக்கிறது. “தேவைப்பட்டால்” அல்லது “விரும்பினால்” தொடக்கக் கல்வியை தாய்மொழியில் கல்வி நிறுவனங்கள் வழங்கலாம் என்று குறிப்பிடுவதன் மூலம் தாய்மொழி வழிக் கல்வியைக் கற்கும் அடிப்படை உரிமையை அனைத்து மாணவர்களுக்கும் மறுக்கிறது. தேசியப் பண்பாடு, இந்தியப் பாரம்பரியம் என்றெல்லாம் சொல்லி ஒரு குறிப்பிட்ட ஆதிக்கச் சாதியினரின் பண்பாட்டையும்,

குறிப்பிட்ட மதத்தின் கோட்பாடுகளையும் அனைத்துக் குழந்தைகள் மீதும் திணிப்பதற்கு இக்கல்விக் கொள்கை வழிவகுக்கிறது.

**தமிழகத்தில் வலுக்கும் எதிர்ப்புகள்**

மேற்சொன்ன காரணங்களுக்காக தேசியக் கல்விக் கொள்கையை தமிழக அரசு முற்றிலும் நிராகரிக்க வேண்டும் என்று கல்விப் பாதுகாப்புக் கூட்டமைப்பு கடந்த 16.08.2020 ஞாயிறு அன்று கல்வியாளர்கள், மாணவர் அமைப்புகள், ஆசிரியர் சங்கங்கள், மக்கள் இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளை ஒருங்கிணைத்து மாபெரும் இணையவழி கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. அன்று நாள் முழுவதும் நடந்த அமர்வுகளில் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர் பங்கு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதைத் தொடர்ந்து தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக 30.08.2020 ஞாயிறு அன்று மாபெரும் முகநூல் பிரச்சாரத்தை இக்கூட்டமைப்பு மேற்கொண்டது. தமிழகம் முழுவதும் நடந்த இந்தப் பிரச்சார இயக்கத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள், இளைஞர்கள், இளம்பெண்கள், தொழிலாளர்கள், பெற்றோர், பெண்கள் என்று பலதரப்பட்டோரும் எழுச்சியோடு கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர். மாலை நேரங்களில் கல்வியாளர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்கள் இயக்கங்களின் பிரதிநிதிகளும், ஆசிரியர் சங்கங்களின் பொறுப்பாளர்களும் கலந்து கொள்ளும் தொடர் கருத்தமர்வுகள் நடைபெற்று வருகின்றன. தேசியக் கல்விக் கொள்கை 2020 எவ்வாறெல்லாம் பல்வேறு தரப்பினரையும் பாதிக்கப்போகிறது, குறிப்பாக ஏழை எளிய கிராமப்புற மாணவர்களை பள்ளிகளிலிருந்து பெருவாரியாக வெளியேற்றவும் அவர்களது உயர் கல்வி வாய்ப்புகளை மறுக்கவும் காரணமாகி விடும் என்று விளக்கி வருகின்றனர்.

இதற்கிடையே, நடுவண் அரசு கொண்டு வந்திருக்கும் இக்கல்விக் கொள்கையை தங்கள் மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்று மேற்கு வங்காள அரசு வெளிப்படையாகவே அறிவித்துவிட்டது. ஆனால் தேசியக் கல்விக் கொள்கை முன்வைக்கும் மும்மொழிக் கொள்கையை மட்டுமே எதிர்ப்பதாக தமிழக அரசு தனது எதிர்ப்பை இதுவரை பதிவு செய்துள்ளது. மேற்கு வங்காள அரசைப்போல தமிழக அரசும் தேசியக் கல்விக் கொள்கை 2020 ஐ முற்றிலுமாக நிராகரிக்க வேண்டும் என்று கல்விப் பாதுகாப்புக் கூட்டமைப்பு கேட்டுக் கொள்கிறது. இக்கல்விக் கொள்கையில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான அம்சங்கள் தமிழ்நாட்டிற்கு ஏற்புடையதாக இல்லை.

இக்கல்விக் கொள்கையை ஆராயவும், தமிழகத்தில் இதை நடைமுறைப்படுத்துவதற்கான முடிவு குறித்து பரிந்துரைகளை முன் வைக்கவும் தமிழக அரசு ஏழு பேர் கொண்ட ஒரு குழுவை கடந்த வாரம் உருவாக்கியுள்ளது. அந்தக் குழுவில் பல்கலைக்கழக இந்நாள் துணைவேந்தர்களும், முன்னால் துணைவேந்தர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்த குழுவிற்கு தமிழக அரசின் முதன்மைச் செயலாளர் திருமிகு. அபூர்வா, இ.ஆ.ப. அவர்கள் தலைமை ஏற்பதாக தமிழக அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. இக்குழுவில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களில் பிரதிநிதிகளோ, மாணவர் அமைப்புகளின் பிரதிநிதிகளோ, பேராசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளோ, கல்வி நிறுவனங்களை தமிழ்நாட்டில் பெருமளவில் நிர்வகிக்கக்கூடிய சமயச் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளோ இடம் பெறாதது கவனிக்கத்தக்கது.

**உங்களையும் அன்போடு அழைக்கிறோம்**

எனவே தமிழகத்தின் எதிர்காலத்தை கடுமையாக பாதிக்கப்போகும் தேசியக் கல்விக் கொள்கையை தமிழக அரசு முற்றிலுமாக நிராகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கல்விப் பாதுகாப்புக் கூட்டமைப்பு பல்வேறு தளங்களில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது. மாணவர்களின் எதிர்காலத்தில் அக்கறையுள்ள அனைத்து தரப்பினரும் இந்த கோரிக்கையை முன்னெடுத்து தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறோம். பெற்றோர், மாணவர்கள், இளைஞர்கள், இளம்பெண்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கல்வியாளர்கள், கல்வி நிறுவனங்கள், குழந்தை உரிமை ஆர்வலர்கள், பெண்கள் குழுக்கள், மக்கள் இயக்கங்கள், மாணவர் அமைப்புகள், மனித உரிமைக் குழுக்கள் என்று பலதரப்பட்டோரும் பங்கேற்கும் இந்தத் தொடர் போராட்டங்களில் நீங்களும் முழுமையாக கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறோம்.


**கல்விப் பாதுகாப்புக் கூட்டமைப்பு - தமிழ்நாடு & புதுச்சேரி**

99943 68571 – 99943 68503 – 94433 07681 – 99943 68521 – 94430 37968

tnrejectsnep@gmail.com rejectsNEP கல்விப் பாதுகாப்புக் கூட்டமைப்பு https://tnrejectsnep.wordpress.com/